

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | மே 24, 2018 | புரட்சி 17 | முழக்கம் 19 | விலை: ரூ.3.00


# அய்.ஏ.எஸ். – அய்.பி.எஸ் தேர்வுகளில் இடஒதுக்கீட்டு உரிமைகளைப் பறிக்கும் மற்றொரு சதி

மாணவர்கள் யு.பி.எஸ்.சி. நடத்துகிற சிவில் சர்வீஸ் தேர்வு எழுதுகிறார்கள். முதலில் பிரிலிமினரி என்ற தேர்வு. அதில் தேர்ச்சி பெற்ற பிறகு மெயின்ஸ் என்ற தேர்வு. அதன் பிறகு நேர்காணல்.

இந்தத் தேர்விலும் நேர்காணலிலும் பெறுகிற மதிப்பெண்களின் அடிப்படையில் அய்.ஏ.எஸ்., அய்.எஃப்.எஸ்., அய்.பி.எஸ்., அய்.ஆர்.எஸ்... என பல்வேறு மட்டத்திலான பதவிகளுக்குத் தேர்வு செய்யப்படுகிறார்கள். பிறகு அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி முடித்தபிறகு அந்தந்த மாநிலங்களில் அந்தந்தத் துறைகளில் நியமிக்கப்படுகிறார்கள். அதாவது, தேர்வு எழுதிப் பெற்ற மதிப்பெண்களின் தகுதியின் அடிப்படையில், இட ஒதுக்கீட்டில் கிடைத்த உரிமையின் அடிப்படையில் அய்.ஏ.எஸ். அல்லது அய்.பி.எஸ். ஆகிறார்கள்.

இந்த வழிமுறையின்படி, எந்த சமூகத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் தேர்வு முடிந்த பிறகு அய்.ஏ.எஸ். அல்லது அய்.பி.எஸ். ஆகலாம். இதன் மூலம்தான் அட்டவணை சாதியினரும், (மிக அரிதாக) பழங்குடியினரும் இந்த உயர் பதவிகளை எட்ட முடிகிறது.

மோடி அரசு இப்போது இதில் தந்திரமாக பெரியதொரு மாற்றத்தைச் செய்யத் திட்டமிட்டு, அதை செயல்படுத்தவும் துவங்கி விட்டது. அது என்ன?

இனிமேல் யு.பி.எஸ்.சி. தேர்வு மதிப்பெண்களின் அடிப்படையில் அய்.ஏ.எஸ். / அய்.பி.எஸ். என ஒதுக்கப்பட மாட்டார்கள். தேர்வு செய்யப்பட்ட பிறகு, அடிப்படைப் பயிற்சியில் எவ்வளவு மதிப்பெண்கள் என்பதன் அடிப்படையில் பதவி ஒதுக்கீடு செய்யப்படும். (இதற்கான சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.) இந்தத் திட்டத்தை செயல் படுத்துவதற்காக, இந்த ஆண்டு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு அய்.ஏ.எஸ். / அய்.பி.எஸ். ஒதுக்கீடுகள் இன்னும் தரப்படவில்லை என்கிறார்கள்.

பிரதமர் அலுவலகத்தின் ஆலோசனையின்படி இந்த நடவடிக்கை எடுத்திருப்பது மைய அரசுப் பணியாளர்கள் அமைச்சகம் - Department of Personnel and Training (டி.ஓ.பி.டி.). யு.பி.எஸ்.சி. என்பது அரசமைப்புச்சட்ட ரீதியான அமைப்பு. அது தேர்வுகளை நடத்தி தகுதியானவர்களைத் தேர்வு செய்து தருகிறது.

மேலே சொன்ன டிஓபிடி என்பது மைய அரசின் ஓர் அங்கம். ஆக, அரசமைப்புச்சட்ட ரீதியான அமைப்புக்கும் மேலே உச்ச அதிகாரம் பெறப் பார்க்கிறது டிஓபிடி. பயிற்சியில் பெறும் மதிப்பெண்களின் அடிப்படையில் பதவி ஒதுக்கீடு செய்வதில் என்ன தவறு என்று கேட்கலாம்.

பயிற்சி மையத்தை நிர்வாகம் செய்பவர்கள் யார், அவர்கள் நேர்மையாக செயல்படுவார்களா, சாதி உணர்வு மத உணர்வு இல்லாமல் நடுநிலையாக செயல்படுவார்களா என்பது மிகப்பெரிய கேள்வி. தமக்கு வேண்டப்பட்டவர்களுக்கு மட்டும் நற்சான்றிதழும் நல்ல மதிப்பெண்களும் கொடுத்து விட்டு, தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வஞ்சகம் புரியும் சாத்தியங்கள் அதிகம்.

அத்துடன், பயிற்சியின்போது இந்தியிலும் ஒரு தேர்வு உண்டு. இந்தியல்லாத பிறமொழிப் பகுதிகளிலிருந்து வந்தவர்கள் நிச்சயமாக இந்திப் பகுதியைச் சேர்ந்தவர்களின் அளவுக்கு அதில் தேர்ச்சி பெற முடியாது. அப்போது அவர்களுடைய மதிப்பெண்கள் குறையும். இந்தச் சுற்றறிக்கையில் பயன்படுத்தப்பட்டிருக்கும் வாசகங்கள் மிகக் கவனமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

Based on the combined score obtained in the Civil Services Examination and the Foundation Course ஆக, யுபிஎஸ்சி தேர்வில் பெற்ற மதிப்பெண்களுடன், அடிப்படைப் பயிற்சியில் பெற்ற மதிப்பெண்களையும் சேர்த்து அதன் அடிப்படையில் பதவி ஒதுக்கீடு செய்யப்படும். நிச்சயமாக இது சமூகத்தின் ஒடுக்கப்பட்ட பிரிவினருக்கு எதிராகவே முடியும். தகுதியின் அடிப்படையிலும் இட ஒதுக்கீட்டின் அடிப்படையிலும் ஐஏஎஸ் ஆகக்கூடிய வாய்ப்பு இருப்பவர்களை கீழான வேறு நிலை பதவிகளுக்குத் தள்ள முடியும்.

அது மட்டுமல்ல. சுற்றறிக்கையின் துவக்கத்தில் இருக்கிற வாசகமும் கவனத்துக்கு உரியது. to examine if service allocation/cadre allocation — service allocation - ஒருவரை எந்தப் பதவிக்கு ஒதுக்கீடு செய்வது என்பது; - cadre allocation - ஒருவரை எந்த மாநிலத்துக்கு ஒதுக்கீடு செய்வது என்பது.

அண்மைக்காலம் வரை இதில் என்ன நடைமுறை இருந்தது?

ஒரு மாநிலத்துக்கு 3 பேர் தேர்வு செய்யப்படுகிறார்கள் என்றால், ஒருவர் அதே மாநிலத்தைச் சேர்ந்தவராக இருப்பார், இருவர் வேறு மாநிலத்தவராக இருப்பார்கள். 2017 முதல் இதிலும் ஒரு மாற்றம் வந்தது. அவரவர் விருப்ப முன்னுரிமை தரலாம் என்று சொல்லப்பட்டது. ஆனால் இப்போது இதிலும் மாற்றம் செய்யப்படுகிறது. அடிப்படைப் பயிற்சியில் கிடைத்த மதிப்பெண்களின் அடிப்படையில்தான் பதவியும் ஒதுக்கப்படும், பணியிடமும் ஒதுக்கப்படும். மாநிலங்களின் உரிமைகளையும், அரசமைப்புச்சட்ட அமைப்புகளின் அதிகாரங்களையும் ஒவ்வொன்றாகப் பறித்துக் கொண்டே வரும் பாஜக அரசு இன்னும் என்னென்ன செய்யப் போகிறதோ என்று பார்த்துக் கொண்டே இருக்கப் போகிறோமா; இல்லை விரட்டப் போகிறோமா?

பிரதமர் அலுவலக அடிப்படையில் இப்போது வந்துள்ள சுற்றறிக்கையைத் தொடர்ந்து பரிந்துரையில் இப்போது தேர்வு முடிவுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. பயிற்சிக்குப் பிறகு முசோலினியில் உள்ள லால் பகதூர் சாஸ்திரி அகாடமியில் மத்திய அரசின் குழு ஒவ்வொரு மாணவருக்கும் மதிப்பெண் போடுவது இடஒதுக்கீடு கொள்கை மீதான தாக்குதல் என்று தி.மு.க. செயல் தலைவர் மு.க. ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீத இட ஒதுக்கீடு ஆணையை வி.பி.சிங் பிறப்பித்தப் பிறகு அகில இந்திய தேர்வுகளில் அதை நடைமுறைப் படுத்த பார்ப்பன அதிகார வர்க்கம் மறுத்தே வந்தது. நீண்டகால சட்டப் போராட்டத்துக்குப் பிறகே இந்த இடஒதுக்கீட்டைப் பெற முடிந்தது.

தமிழ் மொழியில் தேர்வு எழுதவும் நீண்ட காலப் போராட்டம் நடந்தது. இவ்வளவுக்குப் பிறகு இப்போது மற்றொரு தாக்குதலை நடத்தியிருக்கிறார்கள்.

## எஸ்.வி. சேகரைக் கைது செய்
## காவல்துறை ஆணையகத்தைக் கழகத் தோழர்கள் முற்றுகை—கைது






பெண் பத்திரிக்கையாளர்களை தரக்குறைவாக பேசிய எஸ்.வி.சேகரை கைது செய்யக்கோரி..... சென்னை காவல் ஆணையாளர் அலுவலகத்தைத் தோழர்கள் முற்றுகையிடும் பேராட்டத்தை நடத்தி கைதானார்கள். கழகத் தென்சென்னை மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி தலைமையில் சென்னை எழும்பூரில் 16.05.2018 அன்று மாலை 4 மணிக்கு முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எஸ்.வி.சேகரின் மீது எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காத காவல்துறையை கண்டித்து முழக்கங்கள் எழுப்பப்பட்டன. எஸ்.வி.சேகரை போல் வேடமணிந்து, கை விலங்கு பூணூலுடன் தோழர்கள் வந்தனர். எஸ்.வி.சேகரின் உருவப்படம் எரிக்கப்பட்டது.

தபசி குமரன்(தலைமை நிலையச் செயலாளர்), ந.அய்யனார் (தலைமைக் குழு உறுப்பினர்), வேழவேந்தன் (தென்சென்னை மாவட்டத் தலைவர்), இரா.செந்தில்குமார் (வடசென்னை மாவட்டச் செயலாளர்), ஏசுகுமார்(வடசென்னை மாவட்டத் தலைவர்) மற்றும் கழகத் தோழர்கள் 50 பேர் முற்றுகைப் போராட்டத்தில் பங்கேற்றனர். தோழர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு புதுப்பேட்டை சமூகநலக் கூடத்தில் அடைக்கப்பட்டு இரவு விடுதலை செய்யப்பட்டனர்.

போராட்டம் நடக்க இருப்பதை அறிந்த காவல்துறை ஆர்ப்பாட்டத்துக்கு முதல் நாள் நள்ளிரவில் தோழர்களை முன்னெச்சரிக்கையாகக் கைது செய்தது. இராயப்பேட்டை பகுதி முழுதும் தோழர்கள் வீடு புகுந்து நள்ளிரவில் கதவுகளைத் தட்டி விசாரித்தனர். மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் உமாபதி, செந்தில்குமார், தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் பாரி சிவா, காவை கனி, ராஜா உள்ளிட்ட தோழர்களைக் கைது செய்து நள்ளிரவு வரை இராயப்பேட்டை காவல் நிலையத்தில் வைக்கப்பட்டனர். சேகரைக் கைது செய்யாமல் எங்களை ஏன் கைது செய்கிறீர்கள்? இதுதான் காவல்துறையின் ஒழுங்கா என்று தோழர்கள் ககாவல்துறை அதிகாரிகளிடம் வாதிட்டனர். ஆர்ப்பாட்டத்துக்கு அனுமதிக்காமல் இப்படி நியாயம் கேட்கும் எங்களை கைது செய்வது காவல்துறையை மேலும் மக்கள் மன்றத்தில் அவமானப்படுத்தவே செய்யும் என்று தோழர்கள் கூறியதைத் தொடர்ந்து விடியற்காலை விடுதலை செய்யப்பட்டனர். அடுத்த நாள் திட்டமிட்டபடி முற்றுகைப் போராட்டமும் நடந்தது. போராட்டத்தை நிறுத்த காவல்துறை மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்தன.

## ஏழுமலையானை ‘கைவிட்ட’ அர்ச்சகர்கள்

# பா.ஜ.க.-தெலுங்கு தேச அணிகளாகப் பிரிந்து ‘அவாளு’க்குள் மோதல்

கோயிலில் கடவுளிடம் நெருங்கவும் கடவுளுக்கு அர்ச்சனை செய்யவும் ‘பிராமணர்கள்’ மட்டுமே தகுதியும் உரிமையும் படைத்தவர்கள் என்ற ‘ஜாதியப் பாகுபாடு’ இப்போதும் ‘ஆகம விதிகள்’ என்ற பாதுகாப்புக்குள் நடைமுறையில் இருந்து வருகிறது. உச்சநீதிமன்றம் ‘பாகுபாட்டை’ உறுதிப்படுத்தும் ‘ஆகமவிதி’களை அடிப்படை உரிமை என்று வியாக்யானம் செய்திருக்கிறது.

ஆகமவிதிகளின்படி பல கோயில்களில் வழிபாடுகள் நடப்பதில்லை என்றும், அர்ச்சகர்கள் ஆகமவிதி களை முறையாகப் பின்பற்றுவதும் இல்லை என்றும் அடுக்கடுக்கான சான்று களுடன் முதல்வராக எம்.ஜி.ஆர். இருந்த காலத்தில் நியமிக்கப்பட்ட நீதிபதி மகாராசன் குழு தனது பரிந்துரையில் பட்டியலிட்டதோடு, உரிய பயிற்சி பெற்ற எந்த ஜாதியினரும் அர்ச்சகராகலாம் என்று அரசுக்குப் பரிந்துரைத்தது. அதன்படி அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகளை அரசு தொடங்கியது, 203 பேர் அனைத்து ஜாதியையும் சேர்ந்தவர்கள் உரிய பயிற்சிப் பெற்றனர். அவர்கள், ஆகமக் கோயில்களில் அர்ச்சகராக்க பார்ப்பனர்கள் மறுத்தனர். உச்சநீதிமன்றம் வரை சென்று வழக்காடினர். தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சியில் சட்டமன்றத்தில் நிறை வேற்றிய ஒருமித்த தீர்மானம்; மகாராசன் குழு பரிந்துரை - அதற்குப் பிறகு தி.மு.க. ஆட்சியில் பிறப்பித்த ஆணை - அர்ச்சகர் பள்ளியில் பெற்ற பயிற்சி; அனைத்தையும் முடக்கிவிட்டனர்.

அர்ச்சகர்கள் புனிதமானவர்கள் என்றும் அதற்கான ஒழுக்க நெறிகளுடன் வாழக் கூடியவர்கள் என்றும் அதற்கான தகுதி பெற்றவர்கள் ‘பிராமண குலத்தில்’ அதிலும் சில குறிப்பிட்ட பிரிவில் பரம்பரை பரம்பரையாக மட்டும் வரக் கூடியவர்கள் என்றும் பார்ப்பனர்கள் வாதிடுகிறார்கள். ஆட்சி அதிகாரத்தின் உச்சத்தில் நிற்கும் அனைவருமே இந்த அர்ச்சகப் பார்ப்பனர்கள் முன் கை கட்டி நிற்கிறார்கள். கருநாடக முதல்வராகப் போகும் குமாரசாமி, அவசர அவசரமாக திருவரங்கம் கோயிலுக்கு ஓடி வருகிறார்.

கடவுள்களிலேயே ‘நட்சத்திரச் செல்வாக்குப்’ பெற்றவன் திருப்பதி ஏழுமலையான். இந்தக் கோயில் நிர்வாகம் பெரும் வணிக நிறுவனமாக செயல்படுகிறது. ‘இந்த திருப்பதி ஏழுமலையான் வர்த்தகக் கம்பெனி’ குறித்த செய்திகள் அன்றாடம் வந்து கொண்டே இருக்கின்றன.

திருப்பதி ஏழுமலையானுக்கு அர்ச்சகராகும் உரிமை வைகாசண ஆகமப் பரம்பரையைச் சார்ந்த நான்கு குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டிருக்கிறது. கொலப் பள்ளி குடும்பம், பைடிப் பள்ளி குடும்பம், பெத்திண்ட்டி குடும்பம், திருப்பதி அம்மா குடும்பம் என்று நான்கு வைணவப் பார்ப்பன குடும்பங்கள் இந்த உரிமைகளை காலங்காலமாக தங்கள் வசம் வைத்துள்ளன (இதைக் கேள்விக் கேட்க எவரும் தயாராக இல்லை; ஆனால் குடும்ப வாரிசு அரசியலை மட்டும் கேள்விக்குட்படுத்துகிறார்கள். எந்த வாரிசு அரசியலும் வாரிசுரிமையும் எதிர்க்கப்பட வேண்டியதுதான்)

திருப்பதி தேவஸ்தான அறங்காவலர் குழு 65 வயதுக்கு மேற்பட்ட அர்ச்சகர்களுக்கு கட்டாய ஓய்வு வழங்க முடிவு செய்தது. இதனால் அர்ச்சர்கள் ரமண தீட்சலு, நாராயணா தீட்சலு, நரசிம்மா தீட்சலு ஆகியோருக்கு கட்டாய ஓய்வு வழங்கப்பட்டது. இதை அர்ச்சகர்கள் ஏற்க மறுத்தனர். அரசு ஊழியர்களுக்கு ஓய்வு பெறும் நிலை வந்தால் அதை ஏற்றே தீர வேண்டும். ஆனால் அர்ச்சகர்கள் ‘ஆண்டவன் அடியார்கள்’ என்பதால் ‘அவாள்’ வைத்தது தான் சட்டம்! பணி ஓய்வுக்கான உத்தரவை வாங்க மறுத்ததால் அர்ச்சகர் ரமண தீட்சலு வீட்டுக்குச் சென்று வீட்டின் கதவில் ‘நீங்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளீர்கள்’ என்ற உத்தரவை ஒட்டினர். எல்லாம் ‘ஏழுமலையான் உத்தரப்படித் தான் நடக்கிறது’ என்று நம்புவதற்கு அர்ச்சகர்கள் தயாராக இல்லை. ஏழுமலையான் நம்பிக்கை என்பது பக்தி வியாபாரத்துக்கான ‘மூலதனம்’ என்பது அர்ச்சகர்களுக்கு நன்றாகவே தெரியும் அல்லவா?

ஏழுமலையானிடம் முறையிடவும் அவர்கள் தயாராக இல்லை. திருப்பதி தேவஸ்தான முடிவை எதிர்த்து தங்கள் ‘அர்ச்சகர் அதிகாரத்தை’ உறுதிப்படுத்திக் கொள்ள பாரதிய ஜனதா கட்சியினரைப் பிடித்தார்கள். பா.ஜ.க.வினரும் ஏழுமலையானின் முடிவு அப்படி இருந்தால் ஏற்றுக் கொள்ள வேண்டியதுதானே என்று கூறாமல் களத்தில் இறங்கினர். பதவி நீக்கம் செய்யப்பட்ட பார்ப்பன அர்ச்சகர்களுக்கு சென்னையில் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றுக்கு ஏற்பாடு செய்து உதவினர். திருப்பதி தேவஸ்தானம் எடுத்த கட்டாய ஓய்வு உத்தரவுக்கு எதிராகப் பேட்டி அளித்தனர்.

ஆந்திராவில் தெலுங்கு தேசம் கட்சியின் கட்டுப்பாட்டில் திருப்பதி தேவஸ்தானம் செயல்படுகிறது. உடனே தெலுங்கு தேசம் கட்சியின் தலைவர்களில் ஒருவரும் ‘ஆந்திரா பிராமின் பரிஷத்’ என்ற பார்ப்பன அமைப்பின் தலைவருமான வெமுரி ஆனந்த் சூர்யா என்பவர் கலகம் செய்யும் அர்ச்சகர்களை பாரதிய ஜனதா கட்சி திரைமறைவில் இயங்குகிறது என்று வெளிப்படையாக குற்றம் சாட்டியுள்ளார்.

இதற்கிடையே மேலும் 15 அர்ச்சகர்களுக்கு கட்டாய ஓய்வு அளித்து கோயில் நிர்வாகம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. திருப்பதி கோயில் தலைமை அர்ச்சகர்களாக அதே பரம்பரையைச் சார்ந்த அதாவது கொல்லப்பள்ளி குடும்பத்தைச் சார்ந்த வேணுகோபால் தீட்சலு என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். அர்ச்சகராகும் உரிமையுள்ள அதே பார்ப்பன குடும்பங்களைச் சார்ந்த மேலும் 3 பேர் நியமிக்கப்பட்டுள்ளதோடு ஒப்பந்த அடிப்படையில் பணியிலிருந்து 32 பார்ப்பனர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

பார்ப்பன குடும்ப பரம்பரைக்குள்ளேயே - இப்போது அர்ச்சகர் பதவிக்கு குடுமிபிடி சண்டைகள் நடக்கின்றன. இவர்கள் ‘ஏழுமலையானைத்’ தூக்கி எறிந்து விட்டு அரசியல் அதிகாரத்திடம் சரணமடைந்துள்ளனர். இப்போது ‘தெலுங்கு தேசம் - பாரதிய ஜனதா’ அணிகளில் அடைக்கலம் புகுந்து கொண்டு தங்கள் சண்டைகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் பிறகும் பார்ப்பன பரம்பரை ஆதிக்கம் மட்டும் அப்படியே நீடிக்கிறது.

கோயில் நிர்வாகத்தில் அரசு தலையிடக் கூடாது என்று இங்கே இந்து முன்னணி கட்சிகள் கூக்குரலிடுகின்றன. அர்ச்சகர்கள் அரசியலுக்குள் புகுந்து கொண்டு அதிகாரப் போட்டிகளை நடத்திக் கொண்டிருக்கிறார்களே, இதற்கு என்ன பதில்? இவையெல்லாம் ஆகம விதிகளில் கூறப்பட்டிருக்கிறதா?

இதற்குப் பிறகும் அர்ச்சகர்கள் புனிதமானவர்கள் என்று கூற இவர்களுக்கு தகுதி இருக்கிறதா?

# உரிமை முழக்க ஊர்திப் பேரணி வெற்றிக்கு உழைத்த தோழர்கள்



ஊர்திப் பயணத்தில் முழுமையாகப் பங்கேற்றத் தோழர்கள் : இரண்யா, கனலி, பரத், விஜி, மாரி அண்ணன், கொளத்தூர் குமார், புகழேந்தி, பாலு துரை, சரஸ்வதி, சுதா, கிருஷ்ணன், பிரபாகரன், கனல் மதி, சாமிநாதன், சங்கர், செல்வேந்திரன், இராசேந்திரன், தம்பி துரை, பிரதாப், பென்னட், அண்ணாதுரை, சிவகாமி, முத்துக் குமார், செல்வம், அம்ஜத் கான், மலர், சங்கீதா, யாழிசை, யாழினி, மீனா, முத்துப்பாண்டி, சஜினா, சௌந்தர், சுசீந்திரன், திலீபன், ஜென்னி, மதிவதனி, கதிரவன், இளமதி, யாழினி, சூலூர் பன்னீர் செல்வம், ஜோதி, தமிழ்ச் செல்வன், அறிவுமதி, இராமச்சந்திரன், யுவராஜ், சத்தியராஜ், வேணுகோபால், கதிர்வேல், இரத்தினசாமி, விக்னேஷ், குமரேசன், பால் பிரபாகரன், துரைசாமி, கண்ணன், அய்யப்பன், சக்திவேல், கார்த்திக், சந்திரசேகர், தினேஷ், விஜயகுமார், கோபி, கொளத்தூர் மணி, விடுதலை இராசேந்திரன், .

- பறைக்குழுத் தோழர்கள் (மேட்டூர் காவேரிகிராஸ் பகுதி) : சக்திவேல், கார்த்திக், சந்துரு, விக்னேஷ், ஆர்.எஸ். விவேக், அண்ணாதுரை, இரண்யா, குமரேசன், கொளத்தூர் பரத்.
- பயணக் குழு செலவுக்காக தொடக்கம் முதல் நிதியை முன்னின்று திரட்டிக் கொடுத்த தோழர்கள் கொளத்தூர் பரத், நங்கவள்ளி கிருஷ்ணன், மேட்டூர் ஆர்.எஸ். பகுதி சுசீந்திரன், இரண்யா, குமரேசன் ஆகியோர். ஊர்திப் பேரணி வெற்றிக்கும் இவர்கள் முக்கிய காரணமானவர்கள்.
- உண்டியல் வசூல் மூலம் வந்த தொகை: 9.5.2018இல் - ரூ.3,488; 10.5.2018இல் - ரூ.11,219; 11.5.2018இல் - ரூ.9,050; 12.5.2018இல் - ரூ.2,580.
- ஊர்திப் பேரணிக்காக இரத வாகனத்தை ஈரோடு இரத்தின சாமி மேற்பார்வையில் நாத்திகசோதி, குமார், பவானி வேணுகோபால் ஆகியோர் வடிவமைத்தனர்.
- பயணக் குழு செல்வதற்காக முன்னேற்பாடுகளை - தோழர்கள் தங்குவதற்கு, உணவு போன்ற ஏற்பாடுகளைச் செய்வதற்கு அந்தந்த மாவட்ட பொறுப்பாளர்களை சந்தித்து ஏற்பாடுகளை மாநில பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரன், ஈரோடு இரத்தினசாமி (மாநில அமைப்புச் செயலாளர்), திருப்பூர் துரைசாமி (பொருளாளர்), சூலூர் பன்னீர் செல்வம் ஆகியோர் செய்தனர்.
- குறிப்பாக இந்த பரப்புரை ஊர்திப் பேரணி குழுவில் இருந்த தோழர்களே வாகன ஓட்டுனர்களாகவும், வீதி நாடக கலைஞர்களாகவும், பன்முகத் திறன் கொண்ட தோழர்களாக செயலாற்றினர். இந்த ஊர்திப் பேரணி வெற்றியடைய இதுவும் ஒரு காரணம்.

பெரியார் கைத்தடி - அம்பேத்கர் கண்ணாடி - உரிமை முழக்க ஊர்திப் பேரணி, சேலம் மாவட்டத்தில் மட்டும் செயல்படுத்த தோழர்களால் முதலில் திட்டமிடப்பட்டது. பின்பு கழகத் தலைவரின் ஆலோசனை பேரில் இதை மாநிலம் தழுவிய நிகழ்ச்சியாக மாற்றி விரிவுபடுத்தப் பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

- பயணக் குழு தோழர்களுக்கான சீருடைகளை காவை ஈசுவரன் ஏற்பாடு செய்து கொடுத்தார்.
- உரிமை முழக்க ஊர்திப் பேரணி தொடக்கம் முதல் முடியும் வரையிலான அனைத்துப் பகுதிகளிலும் நடைபெற்ற நிகழ்ச்சி தொடர்பான முழு விவரங்களையும் குறிப்பெடுத்து வந்தார் மேட்டூர் அண்ணாதுரை.
- ஒவ்வொரு நாளும் நிகழ்ச்சி முடிந்து இரவு உணவு வேளை முடிந்த பின்பு அடுத்த நாள் நிகழ்ச்சிக்கான தோழர்களின் பயணக் குழு பணிகள், நிகழ்ச்சி குறைபாடுகள் போன்ற கருத்துகள் விவாதிக்கப்பட்டன. இதுவும் பயணக் குழு வெற்றிக்கு காரணமாகும்.
- நிகழ்ச்சிகளை புகைப்படக் குழு தோழர்கள் கொளத்தூர் விஜி, விக்னேஷ் ஆகியோர் படமெடுத்தனர்.
- பயணக் குழு வாகன ஓட்டுனர்கள்: ஆனைமலை கதிர்வேலு (மாவட்ட அமைப்பாளர்), பரத், பாலு துரை, குமரேசன், அம்ஜத்கான், ராஜா.

தொகுப்பு : மேட்டூர் அண்ணாதுரை

## சென்னை மாநாட்டில் பேரா. செயராமன் பேச்சு

# இந்தியாவை ஆரிய மயமாக்கும் சதி

*ஏப்ரல் 30, 2018 அன்று தோழர் பத்ரி நாராயணனின் 14ஆவது நினைவு நாளையொட்டி சென்னை, ராயப்பேட்டையில் நடந்த நிலம் பாழ்– நீர் மறுப்பு– நீட் திணிப்பு, தன்னாட்சி– தன்னுரிமை மீட்பு மண்டல மாநாட்டில் மீத்தேன் எதிர்ப்புத் திட்ட கூட்டமைப்புத் தலைவர் பேராசிரியர் ஜெயராமன் 'நிலம் பாழ்' என்ற தலைப்பில் ஆற்றிய உரை.*


ஒரு பேராபத்தை தமிழகம் எதிர்நோக்கியிருக்கிறது. வரலாற்றிலே இவ்வளவு பெரிய பேராபத்தை தமிழகம் எப்போதாவது சந்தித்திருக்குமா என்று எனக்கு சந்தேகமாக இருக்கிறது. எல்லாத் தளங்களிலும் தமிழகம், தமிழர்கள் ஒடுக்கப்படுகிறார்கள். அதுகுறித்துதான் இந்த மண்டல மாநாட்டிலே அறிவார்ந்த தலைவர்கள் பேசவிருக்கிறார்கள். அதிலே, தமிழகத்தின் நிலம் எப்படிப் பாழ்படுகிறது, வாழ முடியாத ஒரு பகுதியாக தமிழ்நாடு எப்படி மாற்றப்படுகிறது, இதனால் என்ன ஆகும் என்பது குறித்து என்னுடைய கருத்துக்களை உங்களோடு பகிர்ந்து கொள்ள இருக்கிறேன்.

ஒரு மனித இனத்திற்கு வாழ்வதற்கு அடிப்படையானது மண். மண்தான் மனித வாழ்வை வடிவமைக்கிறது. ஒரு மனிதனுடைய தோற்றத்தை, பண்பாட்டை, அவனுடைய வாழ்வின் போக்கை மண்தான் தீர்மானிக்கிறது. மலைப் பகுதியில் வாழக்கூடிய மனிதனுக்கும், சமவெளியில் வாழக்கூடிய மனிதனுக்கும் வேறுபாடுகள் இருக்கின்றன. மண்ணின் வளம் அல்லது வறட்சியைப் பொறுத்து மனித வாழ்க்கை அமைகிறது. பொருளாதாரம் அதைப் பொறுத்துதான் அமைகிறது. அந்தப் பொருளாதாரம்தான் பண்பாட்டைத் தீர்மானிக்கிறது. ஒரு மண்ணில் வாழும் இனம் நிலைத்து நிற்கும் வரை, தன்னுடைய பண்பாடு, தன்னுடைய மொழியோடு அது சிறந்து வாழும். அந்த மண்ணை விட்டு அந்த இனம் மறைந்துவிட்டால் அதன் பண்பாடு தேய்ந்து மறையும். மொழி காணாமல் போகும். தன்னுடைய அடையாளத்தை இழக்கும். இதுதான் உலக வரலாற்றிலே நாம் காணக்கூடிய ஒன்றாக இருக்கிறது.

ஆற்றுப் படுகையிலேதான் பேரரசுகள் எழுந்தன. இங்கும் கூட காவிரி ஆற்றங்கரையிலே சோழப் பேரரசு, வைகை ஆற்றங்கரையிலே பாண்டியப் பேரரசு, பாலாற்றங்கரையிலே, காஞ்சிபுரத்தை மையமாகக் கொண்டு பல்லவப் பேரரசு என்று பேரரசுகள் எழுந்தன. ஏனென்றால் ஆறுகள் அங்கே வளத்தை அளித்தன. அதனால் அங்கே இதுபோன்ற பேரரசுகள் எழுந்தன. இதெல்லாம் கடந்தகால வரலாறு. இன்றைய நிலை என்பது கவலை தரக்கூடியதாய் உள்ளது. இந்த மண் என்பது முற்றிலுமாக சிதைக்கப்பட்டு, இந்த மக்கள் அகதிகளாக வெளியேறக்கூடிய ஒரு சூழல் எழுந்திருக்கிறது. 7.5 கோடி தமிழர்கள் வாழக்கூடிய, தமிழர்களின் தாயகம் சிதைந்து கொண்டிருக்கிறது. கடந்த காலங்களில் இருந்த ஏரிகள் குளங்கள் இன்று காணாமல் போயிருக்கின்றன. முப்பத்தொன்பதாயிரம் ஏரிகளும், குளங்களும் கொண்டிருந்த நிலப்பரப்பு நம்முடையது. காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் மட்டும் 5000 ஏரிகள் இருந்தன. ஆனால் இன்று 2,600 ஏரிகள்தான் இருக்கின்றன.

தமிழர்கள் உலகின் மூத்த இனம் என்ற வரலாற்றுக்கு இங்கே சான்றாக இருப்பவை இங்குள்ள மலைகள். உலகம் தோன்றி 450 கோடி ஆண்டுகள் ஆகியுள்ளன. உலகின் மிக மூத்த மலை என்பது தென்னிந்தியாவில், தமிழ்நாட்டில் இருப்பவை. இந்த மலைகள் எல்லாம் இன்று காணாமல் போய்க் கொண்டிருக்கின்றன. ஒரு நாளைக்கு 10,000 கன மீட்டர் வரை மலைகள் நொறுக்கப்பட்டு எடுத்துச் செல்லப்படுகிறது. இது இல்லாமல் மணற்கொள்ளை ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்கிறது. ஒரு நாளைக்கு ஒரு லட்சம் லாரிகள் மணலை சூறையாடிக் கொண்டிருக்கின்றன. கிராவல் மண் என்பது தமிழகத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறது. ஒரு நாளைக்கு 2 லட்சம் லாரிகள் கிராவல் மண்ணை எடுத்துச் செல்கின்றன.

வந்தேறிக் கொண்டிருக்கிற பன்னாட்டு பெரு முதலாளிகளின் தேவைக்காக அனல் மின் நிலையங்கள் நிறுவப்படுகின்றன. கடலூரிலிருந்து வேளாங்கண்ணி வரை கடற்கரை ஓரமாக 12 அனல்



**தமிழர்களை அழிக்கும் நச்சுத் திட்டங்கள்**

மின் நிலையங்கள் இப்போது நிறுவப்பட இருக்கின்றன. நாகூருக்கு அருகிலே உள்ள துறைமுகம் நிலக்கரி இறக்குமதி செய்து மக்கள் வாழ முடியாத பகுதியாக அப்பகுதியை ஆக்கிக் கொண்டிருக்கிறது. இன்னும் மூன்று துறைமுகங்கள் தொடங்கப்பட இருக்கின்றன. மொத்தத்தில் பன்னாட்டு முதலாளிகளின் தேவைக்காக கரிக்காடாக அந்தப் பகுதி மாற இருக்கிறது. இறக்குமதி செய்யப்படுவது கூட இன்னும் கொஞ்ச நாளைக்குத்தான். காவிரிப் படுகையிலே 1600 அடி வரையில் நிலக்கரி இருக்கிறது. இதை 100 ஆண்டுகளுக்கு எடுக்கலாம். இதை எடுப்பதற்கு முன்பாக 25 ஆண்டிலிருந்து 30 ஆண்டுகள் வரை அந்த நிலக்கரி இடுக்கிலே இருக்கக்கூடிய மீத்தேன் என்ற எரிவாயுவை எடுக்கலாம். ஆக தஞ்சை, திருவாரூர், நாகை மூன்று மாவட்டங்களும் கரிக்காடாக மாறவிருக்கிறது. அதுவும் பன்னாட்டு முதலாளிகளின் தேவைக்காகத்தான்.

**ஷேல் ஆயில்**

ஷேல் ஆயில் என்று சொல்லக்கூடிய பாறை எண்ணெய் 3.25 கிலோமீட்டர் ஆழத்தில் காவிரிப் படுகையில் இருக்கிறது. இதுவும் மீத்தேன்தான். 500 அடிக்கு கீழ் இருக்கக்கூடிய நிலக்கரி இடுக்கில் இருக்கக்கூடிய எரிவாயுவும் மீத்தேன்தான். இந்த மீத்தேனை எடுக்க ஒரு அபாயகரமான தொழில்நுட்பம் பின்பற்றப்படுகிறது. நீரியல் விரிசல் (Hydraulic fracturing) என்ற முறையில் 634 ரசாயனங்களைப் பயன்படுத்தி, அந்த மண்ணை நச்சுக் காடாக்கி கீழே இருக்கக்கூடிய நிலக்கரி ஆனாலும் சரி, அதற்குக் கீழே இருக்கக் கூடிய ஷேல் எரிவாயு என்ற சொல்லக்கூடிய களிப்பாறையாக இருந்தாலும் சரி அதை நொறுக்கி, உறிஞ்சி எடுப்பார்கள். மொத்தத்தில் 30 ஆண்டுகளுக்குள் காவிரிப் படுகை மக்கள் வாழ முடியாத பகுதியாக மாறும். பன்னாட்டு முதலாளிகள் மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். இந்தப் பகுதிக்கு அவர்கள் ஏராளமான எண்ணிக்கையில் வந்தேற இருக்கிறார்கள். பல்வேறு தொழில்களை தொடங்க இருக்கிறார்கள். வயல்களை எல்லாம் கைப்பற்றி தொழிலகங்களாக மாற்ற இருக்கிறார்கள்.

**ஓ.என்.ஜி.சி செய்த வேலைகளால் பல பகுதிகளில் மக்கள் தீர்க்கவே முடியாத நோய் கொண்ட மக்களாக மாறியிருக்கிறார்கள்.**

நிலம் கையகப்படுத்தல் சட்டப்படி ஒரு தொழிற்சாலை தொடங்க அதன் முதலாளி நிலத்தைக் காட்டிவிட்டால் போதும், அரசாங்கமே பிடுங்கிக் கொடுக்கும். என்னுடைய வயலை நான் தர மாட்டேன் என்று விவசாயி சொல்ல உரிமை கிடையாது. இதற்கேற்ப ஒவ்வொன்றாக நடந்து கொண்டிருக்கிறது.

இப்பொழுது கூடங்குளத்தில் 6 அணு உலைகள் தொடங்கவிருக்கிறார்கள். பல மாநிலங்களிலிருந்து விரட்டப்பட்டது அது. ஆந்திரா, கர்நாடகா, கேரளா என அங்கெல்லாம் விரட்டப்பட்ட அணு உலைதான், கடைசியில் தமிழ்நாட்டிற்கு, கூடங்குளத்திற்கு வந்துள்ளது. முதலில் ஒரு அணு உலை என்றார்கள். பிறகு இரண்டு என்றார்கள். இன்றைக்கு 6 அணு உலைகள் தொடங்கப்பட இருக்கின்றன. எல்லா வடிவத்திலும் தமிழகம் நெருக்கப்படுகிறது.

அதேபோல தமிழ்நாட்டின் நீராதாரங்கள் குலைந்து போய் விட்டன. 239 நீர் வட்டங்கள் அபாயத்தில் இருக்கின்றன. உப்பாகிப் போனவை என்று அரசாங்கம் அறிவிப்பது 11. தண்ணீர் இதற்கு மேல் கிடையாது என்று கறுப்புப் பகுதியாக அறிவிக்கப்பட்டிருப்பது 10. பாதுகாப்பானவை என்று தமிழகத்தில் சொல்லக்கூடியது 110 வட்டங்கள் மட்டும்தான். இப்படி அதலபாதாளத்திற்கு நிலத்தடி நீர் போய்க் கொண்டிருக்கிற நிலையில், பன்னாட்டு நிறுவனங்களும், வட இந்திய நிறுவனங்களும் நிலத்தடி நீரை மேலும் சூறையாடிக் கொண்டிருக்கின்றன. திட்டமிட்டு ஒரு நீர் முற்றுகையைத் தமிழகத்தின் மீது சுமத்தியிருக்கிறது இந்திய அரசு.

இந்தியத் துணைக்கண்டம் முழுவதுமே ஆரியத்தின் ஆட்சி நடக்க வேண்டும் என்று இந்திய அரசு விரும்புகிறது. அறிவு என்றால் அது வேதத்தில் இருந்து பிறந்தது, மொழி என்றால் அது சமசுகிருதத்தில் இருந்து பிறந்தது, இனம் என்ற ஒன்று இருக்குமானால் அது ஆரியத்திலிருந்து பிறந்தது, அவைதான் இங்கு இருக்கலாம். இதற்கு மாறுபட்ட ஒன்று இங்கு இருக்குமானால் எங்களால் அதை சகித்துக்கொள்ள முடியாது என்று ஆரியம் பேசுகிறது. பார்ப்பனிய மேலாண்மையை, சமசுகிருத மேலாண்மையை, வேத மேலாண்மையை இந்த மண்ணில் மீண்டும் நிலைநிறுத்திவிட வேண்டுமென்று நீண்டகாலமாக ஆரியம் போராடி வருகிறது. வருணாசிரம ராஜ்யத்தைத்தான் அவர்கள் இந்து ராஷ்ட்ரியம் என்று சொன்னார்கள். இப்போது ராமராஜ்யம் என்று சொல்கிறார்கள். அந்த இலக்கை நோக்கி நகர்த்திக் கொண்டே இருக்கிறது இந்திய அரசு. அதில் காங்கிரசை விட பாஜக தீவிரமாக இருக்கிறது.

தமிழ்நாட்டைப் போல மேலும், சில மாநிலங்கள் மீதும் இவர்களுக்கு தீராப்பகை இருக்கிறது. அந்தப் பகை காஷ்மீர் மீது இருக்கிறது. மரபணு ரீதியாக அவர்கள் ஆரியர்களாக இருந்தாலும் இப்போது அவர்கள் இந்துத்துவத்தை எதிர்க்கிறார்கள். அதனால் காஷ்மீரை ஒடுக்குகிறார்கள். அதேபோல வட கிழக்கு மாநிலங்கள் மீதும் இவர்களுக்கு தீராப்பகை இருக்கிறது. அவர்கள் மொழியும், பண்பாடும் ஆரியத்தோடு தொடர்பில்லாதது. அதனால் ஒடுக்குகிறார்கள். தெற்கில் ஆரியம் கலந்ததால் தமிழ் தெலுங்கானது, கன்னடமானது, மலையாளமானது. அந்த ஆரியத்தைப் பிடுங்கி வேரோடு எறிந்துவிட்டு மொழித் தூய்மை பேணக்கூடியதாக இங்கே தமிழ் இருக்கிறது. அதனால் இந்தியா தமிழை மன்னிக்கத் தயாராக இல்லை.

1980 முதல் இங்கே எண்ணெய் எடுக்கிறார்கள். அதனால் நிலத்தடி நீர் மாசடைந்திருக்கிறது. நிலம் வாழ முடியாத பகுதியாகி இருக்கிறது. ஓ.என்.ஜி.சி செய்த வேலைகளால் பல பகுதிகளில் மக்கள் தீர்க்கவே முடியாத நோய் கொண்ட மக்களாக மாறியிருக்கிறார்கள். பல குழந்தைகள் மாற்றுத் திறனாளிகளாகியிருக்கின்றனர். முன்னரே கச்சா எண்ணெய் எடுத்துக் கொண்டிருந்த திட்டம் இல்லாமல் மீத்தேன் திட்டத்தை 2010ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தினார்கள். கிரேட் ஈஸ்டன் எனர்ஜி கார்ப்பரேசன் என்ற தனியார் நிறுவனத்துக்கு 691 கிலோமீட்டர் சதுர பரப்பளவில் தஞ்சை, திருவாரூர் பகுதிகளில் நிலக்கரி படுகை மீத்தேன் எடுக்க அனுமதி வழங்கினார்கள். ஆனால் கடுமையான எதிர்ப்பு கிளம்பியது. உடனே அன்றைய முதல்வர் ஜெயலலிதா அதைத் தடை செய்து ஒரு வல்லுநர் குழு அமைத்தார். அந்த வல்லுநர் குழு தனது அறிக்கையில், 'மீத்தேன் எடுத்தால் அந்தப் பகுதியின் அமைப்பே மாறிவிடும், பசுமை அழிந்துவிடும், உழவுச்சூழல் கெடும். நிலத்தட்டுகள் நகரும். பூகம்பம் ஏற்படும். இதைக் கைவிடுவது நல்லது அல்லது மறுபார்வை செய்ய வேண்டும்' என்று கூறியது.

அதன் அடிப்படையில் 8.10.2015 தேதியிட்ட தமிழக அரசாணை மீத்தேன் திட்டத்தை தடுத்தது. இதுபோன்ற திட்டங்களை தமிழ்நாட்டிற்குக் கொண்டு வருவதாக இருந்தால் முதலில் தமிழக அரசோடு கலந்தாலோசிக்க வேண்டுமென்றும் இந்த ஆணையில் கூறப்பட்டது. ஜெயலலிதா இறந்த பிறகு அந்த அரசாணையை டெல்லிகாரன் மதிக்கவில்லை என்பது மட்டும் அல்ல. தமிழக அரசே மதிக்கவில்லை. இதன் அபாயங்களையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

(தொடரும்)

**செய்தி தொகுப்பு : பிரகாஷ்**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# நீரவ் மோடி–அம்பானி–அதானி கொள்ளைக் கும்பலின் ‘உறவுச் சங்கிலிகள்’

மோடியின் நண்பரும், மோசடிப் பேர் வழியும், வைர வியாபாரியுமான நீரவ் மோடி, சிங்கப்பூர் பாஸ்போட் மூலம் இலண்டனில் பதுங்கியுள்ளார் என்று அமுலாக்கப் பிரிவு தகவல் தெரிவித்துள்ளது.

நரேந்திர மோடி அரசாங்கத்தில் குஜராத்திலும் அகில இந்திய அளவிலும் பல ஊழல்கள் இந்தியாவை உலுக்கியுள்ளன. சமீபத்தில் அவ்வாறு அடுத்தடுத்து உலுக்கிய ஊழல்கள் நீரவ் மோடியின் ரூ 11,700 கோடி வங்கி மோசடியும் ரோடோமேக் பேனா நிறுவன உரிமையாளர் விக்ரம் கோத்தாரியின் 800 கோடி ஊழலும் ஆகும்.இது வெளிப்பட்ட ஊழல்தான் இன்னும் கணக்குப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.அதில் ரோடோமேக் உரிமையாளர் விக்ரம் கோத்தாரி, நீரவ் மோடிக்கு சளைத்தவர் அல்ல என்பது தெரிய வந்திருக்கிறது.கோத்தாரி அடித்த கொள்ளை ரூ.800 கோடியல்ல; ரூ.3695 கோடி என்பதும் அம்பலமாகி இருக்கிறது.இந்த இரு ‘கனவான்களும்’ வங்கிகளை எவ்வாறு “ஆட்டையை” போட்டார்கள் என்பது குறித்து பல செய்திகள் வெளிவந்துள்ளன. எனினும் வெளிவராத செய்தி ஒன்று உண்டு. வங்கிகளின் பணத்தை அதாவது மக்களின் பணத்தை “ஆட்டையை” போட்ட இவர்களின் குடும்பங்களுக்கும் அம்பானி மற்றும் அதானி குடும்பங்களுக்கும் உள்ள “உறவு” குறித்து பல ஊடகங்கள் கண்களை மூடிக்கொண்டன.

**நீரவ் மோடி– அம்பானி உறவு :** முதலில் நீரவ் மோடிக்கும் அம்பானிக்கும் என்ன உறவு என்பதை காண்போம். நீரவ் மோடியின் முதன்மை நிதி அதிகாரி விபுல் அம்பானி. இவர் அனில் மற்றும் முகேஷ் அம்பானிக்களின் சிற்றப்பாவான நாது பாய் அம்பானியின் மகன்; அதாவது அனில் மற்றும் முகேஷ் அம்பானிகளின் ஒன்றுவிட்ட சகோதரர். இவர் கைது செய்யப்பட்டுள்ளார். விபுல் அம்பானி தனது பணியை அம்பானிகளின் ரிலையன்ஸில்தான் தொடங்கினார். நீண்டகாலம் அங்கு பணியாற்றிய பிறகு நீரவ் மோடியின் நிறுவனங்களுக்கு முதன்மை நிதி அதிகாரியாக செயல்பட்டார். தற்பொழுது சிபிஐ விபுல் அம்பானியை கைது செய்துள்ளது.நீரவ் மோடியின் இளைய சகோதரர் நீஷல் மோடி. இவரது மனைவி இஷாட்டா சல்கோகர். இவர் அம்பானிகளின் சொந்த சகோதரி மகள். அதாவது நீஷல் மோடி அம்பானிகளுக்கு மருமகன் உறவு! இவர்களின் திருமணத்தை அம்பானிக்கள்தான் நடத்திவைத்தனர். செலவு மிக அதிகம் இல்லை ஜென்டில்மேன்! சில நூறு கோடிகள்தான்! நீஷல் அம்பானி மீது சிபிஐ குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளது.ஒரு பக்கத்தில் அம்பானிகளின் சகோதரர் விபுல் அம்பானி நீரவ்மோடிக்கு நிதி அதிகாரி! மறுபுறத்தில் அம்பானி நீஷல் மோடிக்கு மாமனார் முறை! நீரவ் மோடிக்கும் அம்பானிக்களுக்கும் எத்தகைய “உறவுகள்” இருந்தன என்பதை இதன் மூலம் நாம் அறியலாம்!



**விக்ரம் கோத்தாரி– ஜதின் மேத்தா– அதானி உறவு :** அடுத்து ரூ800 கோடி “ஆட்டையை” போட்ட விக்ரம் கோத்தாரிக்கும் நரேந்திர மோடியின் நிழல் மனிதரான அதானிக்கும் என்ன உறவு என்பதை காண்போம்.விக்ரம் கோத்தாரியின் மகள் நர்மதா! இந்த நர்மதாவின் கணவர் பிரணவ் அதானி! இவர் கவுதம் அதானியின் சகோதரர் மகன். அதாவது ரூ.800 கோடி “ஆட்டையை” போட்ட விக்ரம் கோத்தாரியும் அதானியும் “சம்பந்தி”களாக “பரிணமிக்கின்றனர்.” அதோடு இந்த உறவுச் சங்கிலி முடியவில்லை ஜென்டில்மேன்! அதானிக்கு கிருபா அதானி என்றொரு சகோதரி மகள்! இவரது கணவர் சூரஜ் மேத்தா! சூரஜ் மேத்தாவின் தந்தை ஜத்தின் மேத்தா! அதாவது அதானியின் இன்னொரு சம்பந்தி! ஜத்தின் மேத்தாவின் சாதனை என்ன? “வராக் கடன்” எனும் பெயரில் வங்கிகளிடமிருந்து 7000 கோடியை சுருட்டிக்கொண்டார். ஆக, அதானியின் ஒரு சம்பந்தி 800 கோடி “ஆட்டையை” போட இன்னொரு சம்பந்தி 7000 கோடி “ஆட்டையை” போட இதைவிட மோடியின் நண்பர் என்பதற்கு அதானிக்கு வேறு ஏதாவது “தகுதி” வேண்டுமா? இந்தியாவே இந்த மோசடிகள் குறித்து அலறிக்கொண்டிருக்க பிரதமர் “மவுன விரதம்” இருப்பது ஏன் என்பது இப்பொழுது புரிகிறதா?கற்றோரை கற்றோரே காமுறுவர் என்பது வள்ளுவன் வாக்கு. ஆனால் மோசடியில் ஈடுபடும் குடும்பங்கள் மோசடி செய்பவர்களுடன்தான் “திருமண உறவுகளை” உருவாக்குகின்றனர். இந்த மோசடிகள் ஏதோ ஒரு சில வங்கி ஊழியர்கள் செய்துவிட்டதாக சிலர் கூறுகின்றனர். வங்கி நிர்வாகங்கள் மீதும் தணிக்கையாளர்கள் மீதும் அருண்ஜெட்லி கோபத்தைக் கொட்டினார். அல்லது அவ்வாறு தோற்றத்தை உருவாக்குகிறார். வங்கிகளில் உள்ள குறைகளை களைய வேண்டும் என்பதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை. ஆனால் இந்த மோசடிகளுக்கு அடிப்படை காரணம் காங்கிரஸ் அரசாங்கங்கள் தொடங்கிவைத்து தற்பொழுது மோடி அரசாங்கம் வெறித்தனமாக அமலாக்கிவரும் நவீன தாராளமய கொள்கைகள்தான்! இந்த மோசமான பொருளாதார கொள்கைகள்தான் தகுந்த புறச்சூழலை உருவாக்குகின்றன. இத்தகைய கொள்கைகள் தொடரும்வரை மோசடிகளும் தொடரவே செய்யும்.

## தமிழ்நாடு மாணவர் கழகம் – மாணவர்களுக்கு நடத்தும் பயிற்சி முகாம்

தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் பள்ளி – கல்லூரி மாணவர்களுக்கு இரண்டு நாள் பயிற்சி வகுப்புகள் ஏற்பாடாகி வருகின்றன.

ஜூன் 23, 24 நாட்களில் பயிற்சி நடக்கும்.

(இடம் – பின்னர் அறிவிக்கப்படும்)

சமூக நீதி – வரலாறு – கல்வித் துறை சந்திக்கும் ஆபத்துகள் குறித்து கல்வியாளர்கள், வகுப்புகளை நடத்துவார்கள்.

நுழைவுக் கட்டணம் : ஒருவருக்கு இருநூறு ரூபாய். (ரூ.200)

முன் பதிவுக்கு : 9688310621

# முள்ளிவாய்க்கால் படுகொலை: வீரவணக்கம் செலுத்தத் திரண்ட 1000 தோழர்கள் கைது



முள்ளி வாய்க்கால் இனப் படுகொலைக்கு உள்ளான தமிழர்களுக்கு மெழுகுவர்த்தி ஏற்றி வீரவணக்கம் செலுத்திட சென்னை மெரினா கடற்கரையில் திரண்ட ஆயிரக்கணக்கான தமிழர்களை காவல்துறை கைது செய்தது. மே 17 இயக்கம் ஒருங்கிணைத்தஇந்த நிகழ்ச்சியில், திராவிடர் விடுதலைக் கழகம், ம.தி.மு.க., தமிழர் விடியல் கட்சி, எஸ்.டி.பி.அய்., தமிழக வாழ்வுரிமைக் கட்சி, தமிழக மக்கள் ஜனநாயகக் கட்சி, தமிழ்ப் புலிகள் கட்சி, விடுதலை சிறுத்தைகள், த.பெ.தி.க., தமிழர் விடுதலைக் கழகம் உள்ளிட்ட அமைப்புகள் பங்கேற்றன. அனைவரும் கைது செய்யப்பட்டனர். இரவு விடுதலையாகும் முன்பு மெழுகுவர்த்தி ஏற்றி, மாண்டுபோன தமிழர்களுக்கும் விடுதலைப் புலி மாவீரர்களுக்கும் வீரவணக்கம் செலுத்தினர்.

**பேராவூரணியில் :** பேராவூரணியில் தமிழின உணர்வாளர்கள் கூட்டமைப் பின் சார்பில் முள்ளிவாய்க்கால் நினைவுநாள் கடைபிடிக்கப்பட்டது. கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஆறு நீலகண்டன் தலைமையில் திராவிடர் விடுதலைக் கழக சித.திருவேங்கடம், சிபிஎம் பொறுப்பாளர்கள் கருப்பையா, வேலுச்சாமி சி.பி.ஐ. பொறுப்பாளர்கள் ராஜமாணிக்கம், சித்திரவேலு, மெய்ச்சுடர் நா.வெங்கடேசன், தி.வி.க. தா.கலைச்செல்வன், மதிமுக குமார், கோபி, அறநெறி மக்கள் கட்சி த.ஜேம்ஸ், தமிழின உணர்வாளர்கள் பூக்கொல்லை ரமேசு, நீலகண்டன், தமிழ்க் குமரன் ஆகியோர் கலந்து கொண்டு தமிழ் ஈழத்தில் நடந்த இன அழிப்புக்கு காரணமான இந்திய, இலங்கை அரசுகளைக் கண்டித்து முழக்கமிட்டனர்.

# கடும் பெட்ரோல் விலை உயர்வு: அரசின் பகல் கொள்ளை

கடந்த ஐந்தாண்டுகளில் இல்லாத அளவுக்கு பெட்ரோல், டீசல் ஆகியவற்றின் விலை உச்சத்தை தொட்டுள்ளது. ஞாயிறன்று சென்னையில் பெட்ரோல் விலை ஒரே நாளில் 35 பைசா உயர்ந்து 79.13 ஆகவும், டீசல் விலை 28 பைசா உயர்ந்து 71.32 ஆகவும் நிர்ணயிக்கப் பட்டு விற்கப்படுகிறது. சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்துள்ளதால் தான் இந்த விலை உயர்வு செய்யப்படுகிறது என சப்பை கட்டு கட்டப்படுகிறது. ஆனால் கர்நாடகத் தேர்தலையொட்டி கடந்த 19 நாட்களாக பெட்ரோல், டீசல் விலையில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. கடந்த 14ந்தேதி முதல் தினந்தோறும் பெட்ரோல் டீசல் ஆகியவற்றின் விலை உயர்த்தப்படுகிறது.பெட்ரோல், டீசல் ஆகியவற்றின் விலையை தீர்மானிப்பதில் அரசுக்கு எந்தப் பங்கும் இல்லை. சர்வதேச சந்தை விலைக்கேற்பவே பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் விலையை தீர்மானிக்கின்றன என்பது உண்மையானால், கடந்த 19 நாட்களாக விலை உயர்த்தப் படாதது ஏன்? தேர்தலுக்காக விலை உயர்வை தவிர்க்க முடியும் என்றால், பொது மக்களின் சிரமத்தை கணக்கில் கொண்டு ஏன் விலை உயர்வை தவிர்க்க முடியாது என்ற கேள்வி எழுகிறது.

இதில் கொடுமை என்னவென்றால், கர்நாடக தேர்தலுக்காக சில நாட்கள் விலையை உயர்த்தவில்லை. அதை ஈடுசெய்யவே தினந்தோறும் விலை ஏற்றப்படுகிறது என்று வியாக்கியானம் செய்யப்படுவதுதான். தேர்தலுக்காக விலையைஉயர்த்தமாட்டோம். தேர்தல் முடிந்த பிறகு சேர்த்துவைத்து மக்களை தண்டிப்போம் என்பது என்ன நியாயம்?முந்தைய ஐக்கிய முற்போக்கு கூட்டணிஆட்சியில் பெட்ரோலுக்கு அரசு விலை தீர்மானிக்கும் முறை விலக்கிக் கொள்ளப்பட்டது. மோடி ஆட்சிக்கு வந்த பிறகு டீசலுக்கும் இந்த முறை அமல்படுத்தப்பட்டது. சர்வதேச சந்தை விலைக்கேற்ப 14 நாட்களுக்கு ஒருமுறை விலை உயர்த்தப்பட்டது. சர்வதேச சந்தை நிலவரம் என்று கூறிக் கொண்டு விலையை உயர்த்தி மக்களிடையே கலவரத்தை ஏற்படுத்தி வரும் மோடி அரசு, மறுபுறத்தில் உற்பத்தி வரியையும் தொடர்ந்து உயர்த்தி வருகிறது. கடந்த 15 மாதங்களில் பெட்ரோல் மீது லிட்டருக்கு 11.77 காசுகளும், டீசல் லிட்டருக்கு 13.47 காசுகளும் உற்பத்தி வரி உயர்த்தப்பட்டுள் ளது. இதனால் 2014-15ல் 99ஆயிரம் கோடியாக இருந்த உற்பத்தி வரிவருவாய் தற்போது 2 லட்சத்து 42 ஆயிரம் கோடியாக உயர்ந்துள்ளது. அதாவது அரசின் வருமானம் இரட்டிப்பாகி உள்ளது. இப்போதாவது உற்பத்தி வரியை குறைப்பீர்களா என்று கேட்டதற்கு இயலாது என்றே மத்தியஆட்சியாளர்கள் பதில் சொல்லி வருகின்றனர். இப்போது மோடி அரசு செய்து வருவது அப்பட்டமான பகல் கொள்ளையாகும். பெட்ரோல், டீசல் விலை உயர்வதால் அனைத்துப் பொருட்களின் விலையும் உயர்ந்து வருகிறது. உடனடியாக இந்தக் கொடுமைக்கு முடிவு கட்ட வேண்டும். பெட்ரோல், டீசல் ஆகியவற்றின் மீதான உள்நாட்டு வரிகளை குறைப்பதன் மூலம் விலையை கட்டுக்குள் கொண்டு வர முடியும். ஆனால் அம்பானி போன்ற பெருமுதலாளிகள் கொள்ளையடிப்பதற்காகவே மோடி அரசு இந்த அநீதியை இழைத்து வருகிறது. மக்கள் வீதிக்கு வந்து போராடுவதன் மூலமே இதை தடுக்க முடியும்.

**நன்றி: ‘தீக்கதிர்’ தலையங்கம்**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 24th May 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN